பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, இதுபோன்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு TATA நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடப்பட்டு, ரூ.2,877 கோடி ஒதுக்கீடு செய்து, தொழிற்பயிற்சி நிலையங்களை 4.0 தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பல்வேறு புதிய பயிற்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, Robotics and Digital Manufacturing, Electric Vehicle, Advanced CNC Machining, Manufacturing Process Control and Automation, Internet of Things, Advanced Additive Manufacturing, Advanced Welding, Advanced Painting Technology, Advanced Plumbing என இதுபோன்ற புதிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதற்கேற்ப தகுதி படைத்த, திறன் படைத்த இளைஞர்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை இருக்கிறது. நிறைய பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்; வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், அவர்களின் கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

மாணவியர் விடுதி

***3822—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 6]

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிட மாணவிகளுக்கு ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மொத்தம் 1,480 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இதில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 337 மாணவர்கள், 271 மாணவியர்கள் என மொத்தம் 608 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு அருகிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் செயல்படும் கல்லூரி மாணவ/மாணவியர் விடுதியில் அனுமதிக்கப்பட்ட 100 இடங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 24 மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். எனவே, கல்லூரி மாணவியர் விடுதி கட்டுவது குறித்து உரிய ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவிகள் பயின்று வருகிறார்கள். அவர்களெல்லாம் தொலைதூரத்திலிருந்து வருகிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு*

அம்மா அவர்களுடைய ஆட்சியிலும், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலும் அங்கே மூன்று விடுதிகள் கட்டடப்பட்டிருக்கின்றன. ஆனால், ஆதி திராவிட மாணவியர் விடுதி இதுவரை துவங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆதி திராவிட மாணவியர்களுடைய நலன் கருதி, இந்த ஆண்டிலேயே அவர்களுக்கு விடுதி துவங்குவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இருந்தபோதிலும், நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, 6 கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டப்படும் என்று சென்ற நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், M.C. ராஜா வளாகத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களைக் கொண்ட கல்லூரி மாணவர் விடுதியும் கட்டப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்து, அதற்கான பணிகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன. மேலும், இந்த நிதியாண்டில் கோவை, நீலகிரி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய கல்லூரி மாணவர் விடுதிகள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பள்ளி மாணவ விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அந்தப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை கல்லூரி மாணவர் விடுதிகளாக மாற்றுவதற்கும் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை கண்டிப்பாக விரைந்து நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் அரசால் இலவசமாகத் தரப்படுகின்றன. அதே மாணவர்கள்தான் அரசுக் கல்லூரிகளில் சென்று சேருகிறார்கள்; படிக்கிறார்கள். குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்கள் பாடப் புத்தகங்கள் வாங்க முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். பல மாணவர்கள் பாடப் புத்தகம் இல்லாமலேயே படித்து வருகின்றார்கள். எனவே, அரசுக் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு இந்த அரசு இலவச பாடப் புத்தகம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய அனைத்து ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கும் பள்ளிப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் ஆகியவை கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடனும் கலந்துபேசி, இதற்கு உரிய தீர்வு காண்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]